# சுப்ரமணிய பாரதியார்

**பிறப்பு:** *11.12.1882*

**இடம் :** *எட்டையபுரம், திருநெல்வேலி*

**பெற்றோர் :** *சின்னசாமி ஐயர் – இலக்குமி அம்மையார்*

**துணைவி :** *செல்லம்மாள்*

**குழந்தைகள் :** *2 ( தங்கம்மாள், சகுந்தலா)*

**இறப்பு :** *11.09.1921 திருவல்லிக்கேணி கோவில் யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்*

**வாழ்ந்த காலம்:** *(39 ஆண்டுகள்)*

**சமயம்:** *இந்து*

**அறிந்த மொழிகள்:** *தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம், இந்தி போன்று 14 மொழிகள் அறிந்தவர்*

Sirpigal IAS Academy
Think Imagine Feel Do

## பாரதியாருக்கு வழங்கும் புனைப்பெயர்கள்:

*காளிதாசன், சக்திதாசன், சாவித்திரி, ஷெல்லிதாசன், நித்திய தீரர், ஓர் உத்தம தேசாபிமானி, ரிஷி குமாரன், சாவித்ரி, காசி,*

## வேறு சிறப்புப்பெயர்கள்:

*மகாகவி, முன்டாசுக்கவி, மக்கள் கவிஞர், வரககவி, தேசியக்கவி, விடுதலைக்கவி, அமரக்கவி, முன்னறி புலவன், தமிழ்க்கவி, உலககவி, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, பாட்டுக்கொரு புலவன் பாரதி, நீடு துயில் நீங்கப் பாடி வந்த நிலா, காடு கமழும் கற்பூரச் சொற்கோ, புதுக்கவிதையின் முன்னோடி, பைந்தமிழ் தேர்ப்பாகன், சிந்துக்குத் தந்தை, தற்கால தமிழ் இலக்கியத்தின் விடிவெள்ளி. உண்மைக் கவிஞன், உணர்ச்சிக் கவிஞன், உரிமைக் கவிஞன், குழந்தைக் கவிஞன், புதுயுகக் கவிஞன், கண்டனக் கவிஞன், காதற் கவிஞன், சுதந்திர கவிஞன், தெய்வக் கவிஞன்.*

## பெயர் வைத்தவர்கள்

**பாரதிதாசன்:** சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞர், மறம் பாட வந்த மறவன், பைந்தமிழ்த் தேர்பாகன், நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா, காடு கமழும் கற்பூரச் சொற்கோ

**கவிமணி**: பாட்டுக்கொரு புலவன் பாரதி

**ஆங்கில பத்திரிகையாளர் நெவின்சன்:** சென்னையின் தமிழ்க் கவிஞன்

**பாரதியார் பற்றிய முக்கிய தகவல்கள்**

- "**பாரதி**" என்ற பட்டம் இவருக்கு எட்டையபுர மன்னரால் வழங்கப்பட்டது
- "**மகாகவி**" என்ற பட்டத்தை கொடுத்தவர் வ.ராமசாமி
- பாரதியாரின் புத்தகம் **1949இல்** நாட்டுடமையாக்கப்பட்டன
- இந்தியாவிலேயே முதன் முதலில் நாட்டுடமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதே ஆகும்!
- விவேகானந்தரின் மாணவியான, சகோதரி **நிவேதிதா தேவி** என்பவர் பாரதியின் ஞான குரு ஆவர், இவரை முதலில் காசியில் சந்தித்தார்
- முதன் முதலில் **1904ம்** ஆண்டு **விவேக பாணு** என்னும் நாளேட்டில் "**தனிமை இரக்கம்**" என்னும் பாடல் வெளிவந்தன.
- **மதுரை சேதுபதி** மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார்.
- **1904ம்** ஆண்டு சுதேச மித்திரன் என்ற பத்திரிக்கையில் துணை ஆசிரியராக பணி புரிந்தார்
- **1905ம்** ஆண்டு சக்கரவர்த்தினி என்ற பத்திரிக்கையில் பணிபுரிந்தார், காசியில் இந்திய தேசிய இயக்கத்தில் கலந்துகொண்டார்.
- **1906ம்** ஆண்டு இந்தியா என்ற பத்திரிக்கையில் பணிபுரிந்தார்
- **1908ம்** ஆண்டு பாலபாரதம் என்னும் நூலை ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்த்தார், ஸ்வதேச கீதங்கள் நூலையும் வெளியிட்டார் அதனை அவரது நண்பர் வ.உ.சி யுடன் வெளியிட்டார்.
- இந்தியா, கர்மயோகி, சூரியோதையம், விஜயா போன்ற இதழ்களை நடத்தினார்.

Sirpigal IAS Academy Think Imagine Feel Do

- புதுவைக்கு சென்ற பாரதிக்கு **குவளை கண்ணன்** நட்பு கிடைத்தது
- ***1909ம்*** ஆண்டு அவரின் இரண்டாவது கவிதை நூலான ஜன்மபூமி வெளியானது
- ***1948-*** பாரதிக்கு எட்டையபுரத்தில் மணிமண்டபம் எழுப்பப்பட்டது
- ***1960*** – பாரதியின் உருவம் பொறிக்கப்பட்ட தபால் தலை வெளியிடப்பட்டது.
- ***1912ம்*** ஆண்டு பகவத் கீதையை தமிழில் வெளியிட்டார்
- இவர் எழுதிய **பாஞ்சாலி சபதத்தில்** உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை: **5 அவை: சூழ்ச்சி சருக்கம், சூதாட்ட சருக்கம், அடிமை சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச்** சருக்கம்.
- இவர் கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூக சீர்திருத்த சிந்தனையாளர், விடுதலை போராட்ட வீரர் என பன்முக ஆற்றல் பெற்றிருந்தார்.
- பாரதியின் ஞானரதம் என்னும் நூல் தான் முதன் முதலில் தமிழில் வெளி வந்த உரைநடை காவியமாகும்
- நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, யாருக்கும் அஞ்சாத நெறிகள் என்று பாரதியை போற்றுவர்.

**பாரதியார் எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார்.**

## பாரதியார் இயற்றிய உரைநடை நூல்கள்

- **ஞானரதம்** (தமிழின் முதல் உரைநடை காவியம், பாரதிதாசன் = "ஞானரதம் போல் ஒரு நூல் எழுதுவதற்கு நானிலத்தில் ஆளில்லை" என்றார்)
- தராசு
- சந்திரிகையின் கதை
- மாதர்
- கலைகள்
- பதஞ்சலியோக சூத்திரம்

- ஹிந்து தருமம் (காந்தி உபதேசங்கள்)

## ஆங்கில நூல்:

*The Fox with the Golden Tail*

## கவிதை நூல்கள்

- கண்ணன் பாட்டு
- குயில் பாட்டு
- பாஞ்சாலி சபதம்
- காட்சி(வசன கவிதை)
- பாப்பா பாட்டு
- பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி
- பாரததேவியின் திருத்தசாங்கம்
- விநாயகர் நான்மணிமாலை
- சுதேச கீதங்கள் (முதல் கவிதை தொகுப்பு)
- ஜன்மபூமி (2-வது கவிதை தொகுதி)

Sirpigal IAS Academy
Think Imagine Feel Do

## நீதி நூல்

- புதிய ஆத்திச்சூடி

## சிறுகதைகள்

- திண்டிம சாஸ்திரி
- பூலோக ரம்பை
- ஆறில் ஒரு பங்கு
- ஸ்வர்ண குமாரி
- சின்ன சங்கரன் கதை
- பொன்வால் நரி
- நவதந்திரக்கதைகள்

- கதைக்கொத்து(சிறுகதை தொகுப்பு)
- சின்னஞ்சிறு கிளியே

## மொழிபெயர்ப்பு நூல்

- புதிய கட்சியின் கோட்பாடுகள் (திலகருக்கு ஆதரவாக)
- பஞ்ச வியாசங்கள் (தாகூர் கவிதைகள்)
- ஜீவவாக்கு (ஜகதீஸ் சந்திர போஸ் பற்றியது)

## நாடகம்

- ஜெகசித்திரம்

## வசனகவிதை

- காட்சி

Sirpigal IAS Academy

### பாரதியார் எழுதிய நூல்கள் நினைவில் கொள்ள கதை வடிவில்:

காலையில் எழுந்த பாரதி குயில் பாட்டை ரசித்துக்கொண்டு தன் நண்பன் கண்ணனைக் காண அவள் தங்கை சந்திரிகையுடைய ஞான ரதத்தில் ஏறி போனார்கள். இருவரும் போகும் வழியில் விநாயகருக்கு நான்மணிமாலை அணிவித்து தங்கைக்கு இந்து மதத்தைப் போதித்து ஞானப் பாடல்களும், தோத்திரப் பாடல்களும் பாடி இறைவனை வணங்கினார்கள். வழியில் பொன்வால் நரியையும் சின்னஞ்சிறு கிளியையும் கண்டார்கள். தேசிய விடுதலைக் கீதங்கள் பாடிய வண்ணம் ரதத்தை செலுத்திய பாரதி தன் தங்கைக்கு நவரத்தின கதைகளையும், மகாபாரதக் கதைகளையும் கூறினார். அந்த கதைகளிலிருந்து உத்தம வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதை தங்கைக்கு போதித்தான் பாரதி. தன் நண்பன் வீட்டிற்கு செல்லும் தூரத்தில் ஆறில் ஒரு பங்கு தூரத்தை கடந்து புதிய ஆத்திச்சூடியை பாடிக்கொண்டே பயணத்தை தொடர்ந்தனர் பாரதியும் சந்திரிகையும்



Sirpigal IAS Academy
Think Imagine Feel Do

## பாரதியார் பற்றிய தகவல்கள்

- வாழ்க நிரந்திரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே என்று தமிழை போற்றியவர்
- வால்ட் விட்மனின் சாயலில் வசன கவிதைகளை பாடியவர்
- அரசியல் குருவாக **பால கங்காதர திலகை** ஏற்றுக்கொண்டார்
- "ஒருருக்கொருநாட்டுக் குரியதான ஒட்டைச் சாண் நினைப்புடையவர் அல்லர்"
- ஆங்கிலகவிஞர் செல்லியின் மீது பற்றுக்கொண்ட பாரதி தம் பெயரை ஷெல்லிதாசன் என்று மாற்றிகொண்டார்.
- இவர் சீட்டுக் கவிதை மற்றும் வசனக்கவிதைகளை எழுதுவதில் வல்லவர்
- புதுநெறி கண்ட புலவர் என்று வள்ளலாரை புகழ்ந்தவர்
- பாரதிக்கு நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற புறநானூற்று பாடல் அச்சமில்லை அச்சமில்லை என்ற பாடலை எழுத தூண்டியது!
- எட்டப்ப நாயக்கர் மன்னர் இவருடைய கவித்திறனை மெச்சி, "**கலைமகள்**" எனப்பொருள்படும் "பாரதி" என்ற பட்டம் வழங்கினார்
- தம் பூணூலை கனகலிங்கம் என்ற ஆதி திராவிடற்கு அளித்தவர்
- தம் பாடல்களுக்கு தாமே மெட்டு அமைத்த கவிஞர்
- "இந்தியா" என்ற இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்
- சென்னை **ஜனசங்கம்** என்ற அமைப்பைத் தொடங்கினார்
- இவர் "தம்பி" என அழைப்பது = **பரலி நெல்லையப்பர்**
- பாரதியார் பாடல்களை முதன் முதலில் மக்களுக்கு அறிமுகம் செய்தவர் பரலி நெல்லையப்பர்
- பாரதியார் பாடல்களை முதலில் வெளியிட்டவர் **= கிருஷ்ணசாமி ஐயர்**
- பாரதியின் படத்தை வரைந்தவர் **"ஆர்ய என்ற பாஷ்யம்"**
- பாரதி சங்கத்தை தொடங்கியவர் = கல்கி
- மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார்

Sirpigal IAS Academy
Think Imagine Feel Do

- *இவரின் முதல் பாடல் வெளிவந்த இதழ் =* **விவேகபானு** *(1904, தலைப்பு = தனிமை இரக்கம்)*
- *பாரதியின் முதல் கவிதை தொகுதி = சுதேச கீதங்கள்*
- *தாகூரின் சிறுகதைகள் 11ஐத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்*
- *பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில்,* ***"தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் பொது எனக்கு வருத்தம் உண்டாகிறது. தமிழனை விட மற்றொரு சாதி அறிவிலும் வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்குச் சம்மதமில்லை"*** *எனக் குறிப்பிட்டுள்ளார்*
- *உரைநடை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு,* ***"கூடிய வரை பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி"*** *என்கிறார்*
- *தமிழில் முதன் முதலில் கருத்துப்படங்கள் வெளியிட்டவர் இவரே*
- *தமிழ் பத்திரிகை உலகில் முதன் முதலில் கார்ட்டூன்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி. இந்தியா (1905) பத்திரிகைக்கே அந்தப் பெருமை சேரும்.*
- *முதன்முதலில் தமிழ்ப் பத்திரிகையில் தமிழ் ஆண்டு மாதம் குறித்தவர் (இந்தியா, விஜயா பாரதியே. விஜயா இதழில் தமிழ் எண்களையும் பயன்படுத்தி புரட்சி செய்தவர் பாரதி*
- *மகாத்மா காந்தி இந்தியாவில் அறியப்படுவதற்கு முன்னரே 1909ல் காந்திபசு என்ற கருத்துப் படத்தை இந்தியாவில் வெளியிட்டவர் பாரதி.*
- *ஹிந்து ஜனத்தொகை குறைவதன் அபாயத்தையும், தீண்டாமை அரக்கனின் கொடிய விளைவையும் தயவு தாட்சண்யமின்றி சுட்டிக் காட்டியவர் பாரதி*
- ***"புவியனைத்தும் போற்றத் தமிழ்மொழியைப் புகளில் ஏற்ற, கவியரசன் இல்லை என்ற குறை என்னால் தீர்ந்தது; நமக்குத் தொழில் கவிதை! நாட்டிற் குழைத்தல்! இமைப்பொழுதும் சோராதிருத்தல்"*** *என்று அறிவித்தார்*

Sirpigal IAS Academy Think Imagine Feel Do

- **“சுவை புதிது! பொருள் புதிது! வளம் புதிது! சொல் புதிது! சோதிமிக்க நவகவிதை! எந்நாளும் அழியாத மாகவிதை என் கவிதை”** என்று சூளுரைத்தார்
- மரணத் தருவாயில் பாரதி எழுத நினைத்த கட்டுரை = அமானுல்லா கான் பற்றியது
- பாரதியின் இறப்பிற்கு பின்னர் மயானத்தில் இறுதியாக இரங்கல் உரை நிகழ்த்தியவர் = கிறித்துவப் பாதிரியார் சுரேந்திரநாத் ஆர்யா ஆவார்.
- அமர கலா விலாசினி சபை = மகாகவி பாரதிக்கு அவர் மறைவிற்கு பின் முதல் இரங்கல் கூட்டத்தை நடத்தி வரலாற்றுப் பணியை நிகழ்த்தியது “அமர கலா விலாசினி சபை” ஆகும்

## பாரதியார் – சிறப்பு

- "புரட்சி, பொதுவுடைமை” என்ற சொற்களைத் தமிழில் தந்த மகாகவி இவரே.
- கவிதையில் சுயசரிதம் எழுதிய முதல் கவிஞர் இவரே
- பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949-ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்
- பரலி நெல்லையப்பர் = பாரதியார் ஒரு அவதாரப் புருஷர், இவர் நூலைத் தமிழர் வேதமாகக் கொள்வார்களாக
- நாமக்கல் கவிஞர் = பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும்; இந்தியன் நான் என்றிடும் நல் இறுமாப்பு உண்டாம்
- **கவிமணி** = இவரின் பாப்பா பாட்டில் நெஞ்சை பறிகொடுத்தேன்
- பாரதியின் சுயசரிதமே தமிழின் முதல் சுயசரிதம்.
- **சிற்பி பாலசுப்ரமணியம் =** “அவனுக்கு(பாரதி) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை மெட்டும் தெரியும்; ஜப்பானிய ஹைக்கூ லாவகமும் புரியும். தாகூரையும் அறிவான்; வால்ட் விட்மனின் புதுக்கவிதை ஒளியையும் உணர்வான். காளிதாசனான அவன் ஷெல்லிதாசனாகவும் தன்னை

அறிவித்துக் கொண்டவன். சுதந்திரத்தையும் பெண் உரிமையையும் புதுயுகக் கனவுகளையும் நவநவமான மொழிகளில் பேசியவன்” என்கிறார்.

- அனைவரும் தாய்நாடு எனக் கூற பாரதி மட்டும் **தந்தையர் நாடு** எனக் கூறியவர்
- வையாபுரிப்பிள்ளை = இவருடைய பாடல்களில் கருத்தாழமும், ஆற்றலும், எளிமையும், இசை நயமும், தொடர் இன்பமும் ஒருங்கு அமையக் காண்கிறோம். இவ்வளவு சிறந்த கவிஞர் தமிழுலகில் சில நூற்றாண்டுகளாகத் தோன்றவில்லை
- ***Dr.H.Cousins =*** அழகின் தூய - வாய்மையான வடிவத்தை பாரதி கவிதையிலே காண இயலும்
- ***Dr.H.Cousins =*** இந்தியாவின் நான்கு குறிப்பிடத்தக்க கவிஞர்கள் தாகூர், அரவிந்தர், சரோஜினி நாயுடு மற்றும் பாரதியார் ஆவர்
- **வ.ரா =** பாரதியார் எதிர்காலத்தில் பல நூறு ஆண்டுகள் பெருமையுடன் மதிக்கப்படப் போகின்ற கவிஞர்களின் சிரோஸ்டமானவர். பாரதியாரின் கவிதை உள்ளம், நவரசங்கள் வழியாக வழிந்தோடி வெள்ளப் பெருக்கெடுத்திருப்பதை அவருடைய பாடல்களில் காணலாம் .அவர் ஒரு சர்வக்கவி; அதாவது உலகக்கவி. இந்த ஸ்தானம் அவருடைய கவிதைக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை
- **வ.ரா =** பாரதியாரின் கவிதை ஆளாம் கரையும் காண முடியாத கடலாகும்; பாரதியாரை போகியும் போற்றுவான்; யோகியும் போற்றுவான்; ஆகாயத்தில் இருந்து விழும் நீர்த்துளிகள் யாவும் எப்படியோ கடலுக்குப் போய்ச் சேர்ந்து விடுவது போல, பல்வேறு தன்மைகள் கொண்ட மனித உள்ளங்கள் மகாகவி என்ற அலையிலாப் பெருங்கடல் உள்ளத்தில் போய் அடங்கி விடுகின்றன. ஆகவே மகாகவி எல்லோருக்கும் சொந்தம்”
- கண்ணதாசன் = தமிழகமே, பாரதியைக் கொண்டாடு. அதன்மூலம் பாரதத்தை நீ கொண்டாடுகிறாய்; தேசபக்தியைக் கொண்டாடுகிறாய்; தமிழ் மொழியைக் கொண்டாடுகிறாய்; பாரதியைக் கொண்டாடாதவனுக்கு தமிழன் என்று சொல்லிக் கொள்ள அருகதை இல்லை

Sirpigal IAS Academy Think Imagine Feel Do



Sirpigal IAS Academy Think Imagine Feel Do

- 2021 முதல் தமிழக அரசின் சார்பில் "செப்டம்பர் 11" ஆம் தேதி "மகாகவி நாள்" ஆக ஆண்டு தோறும் கடைபிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது
- வ.உ.சி = பாரதியை "அறிவின் சிகரம்" என்றார்
- வ.உ.சி = தன்னை சோழனாகவும், பாரதியை கம்பனாகவும் கருதி மகிழ்ந்தவர் வ.உ.சி
- வ.உ.சி = பாரதியை மாமனாகவும், தண்ணிய மருமகனாகவும் உறவு கொண்டாடியவர் வ.உ.சி ஆவர்.
- வ.உ.சி = "மாமா இவ்வுலகை விட்டுப் போய்விட்டாலும் அவருடைய தேசிய கீதங்களும் மற்றைய பாடல்களும் கதைகளும் இவ்வுலகம் உள்ள அளவும் நிலைத்து நிற்குமென்பதில் ஐயம் இல்லை. அவருடைய பெயர் தேசாபிமானிகளுடைய சரித்திரத்தில் மட்டுமல்லாமல் கவிகளுடைய சரித்திரத்திலும் முதன்மையான இடத்தைப் பெறும்"

Sirpigal IAS Academy

## பாரதி கூறிய மேற்கோள்கள்

Think Imagine Feel Do

- யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிப்போல் இனிதாவது எங்கும் காணோம்
- சொல்லில் உயர்வு தமிச் சொல்லே – அதைத் தொழுது படித்திடடி பாப்பா
- மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்
- ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை சாதியில்
- உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
- வாக்கினிலே ஒளி உண்டாம்
- தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
- செந்தமிழ் நாடென்ற போதினிலே
- "கவிதை எழுதுபவன் கவியன்று"
- "கவிதையே வாழ்க்கை, வாழ்க்கையே கவிதை"
- "நமக்கு தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல் இமைபொழுதினும் சோராதிருத்தல்"



Sirpigal IAS Academy Think Imagine Feel Do

- “பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு”
- “செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே”
- “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு“
- “நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு”
- “வைரமுடைய நெஞ்சு வேணும்”
- “பகைவனுக்கருள்வாய் தன் நெஞ்சே! பகைவனுக்கருள்வாய்“
- “ஒருருக்கொருநாட்டுக் குரியதான ஓட்டைச் சாண் நினைப்புடையவர் அல்லர்”

Sirpigal IAS Academy
Think Imagine Feel Do